# 2018 – 2019 +2 வணிகவியல் 2,3,5 மார்க் வினா விடைகள்

## பாடம் 2. தனியாள் வணிகம்

1. **உரிமையின் அடிப்படையில் தொழில் அமைப்புகளின் வகைகள்:** 1. கூட்டுருவாக்கம் பெற்ற நிறுவனங்கள் 2. கூட்டுருவாக்கம் பெறாத நிறுவனங்கள்.
2. **கூட்டு உருவாக்கம் பெற்ற அமைப்புகள்:** உரிமையும் நிர்வாகமும் **பிரிக்க கூடியது.** கூட்டுப் பங்கு நிறுமம், கூட்டுறவு சங்கம்.
3. **கூட்டு உருவாக்கம் பெறாத அமைப்புகள்:** உரிமையும் நிர்வாகமும் **பிரிக்க முடியாமல் இருப்பது.** தனியாள்வணிகம், கூட்டாண்மை, இந்துக் கூட்டுக் குடும்பம்.
4. **தனியாள் வணிகத்தின் பொருள்:** 1. தொழிலமைப்புகளின் மிகப் பழமையான வடிவமாகும்.
   2. இத்தொழிலை அமைப்பது எளியது, சுலபமானது.
   3. ஒரே ஒரு நபரின் முதலுடன், அந்நபரின் அனுபவம் மற்றும் தொழில் திறனைக் கொண்டு, முழுப் பொறுப்பினையும் அந்நபரே ஏற்று நடத்தும் வணிகம் ஆகும்.
5. **தனியாள் தொழில்களைத் துவங்க ஒரே ஒரு சட்ட நடைமுறை யாது?**
   1. உள்ளாட்சியிடமிருந்தோ அல்லது நகராட்சியிடமிருந்தோ உரிமம் பெற வேண்டியிருக்கும்.
   2. இவ்விதி ஒரு சில வணிகத்திற்கு மட்டும் பொருந்தும்.
6. **தனி வணிகம் வரைவிலக்கணம் 1. பி.கே. கோஷ் மற்றும் ஒய்.கே. பூஷன் -** “தன் சொந்த மூலதனத்தை முதலீடு செய்து, தன் சொந்த திறனையும் நுண்ணறிவையும் பயன்படுத்தி, வியாபாரத்தின் லாப நட்டங்களை தானே ஏற்றுக்கொள்ளும் ஒரு அமைப்பே தனி ஆள் நிறுவனம் ஆகும்.”
   **2.** ”தனி நபரால், தனி நபருக்கென்று அமைக்கப்பட்டு இயங்கும் ஒரு வணிகம் தனி ஆள் வணிகம்” என்று **முனைவர் ஓ.ஆர். கிருஷ்ணசாமி** அவர்கள் வரையறுக்கிறார்.
   **3.** ”தனி நபர் ஒருவர் அவருடைய மூலதனத்தை முதலீடு செய்து, சொந்தத்திறனையும் நுண்ணறிவையையும் வியாபார நடவடிக்கைகளை நிர்வகிக்க பயன்படுத்தி, லாபம் முழுவதையும் அனுபவித்து நட்டத்திற்கும் பொறப்பேற்கும் ஒரு வியாபார அமைப்பே தனியாள் வணிகமாகும்;” என்று **தொழில் மற்றும் வணிககலைக் களஞ்சியம்** வரைவிலக்கணம் அளித்துள்ளது.
   **4. வீலர்-** ”தனி ஒரு மனிதருக்குச் சொந்தமானதும், கட்டுப்பாட்டுக்குட்டப்பட்டதுமான ஒரு வியாபார அமைப்பே தனியாள் அவர் தன் சொத்தை வியாபார வெற்றி அல்லது தோல்வி என்ற துணிகரச் செயலுக்குப் பயன்படுத்தி இலாபத்தை பெறுகிறார்” என்று விளக்குகிறார்.
   **5. ஜேம்ஸ் ஸ்டீபன்சன்-** ”தனக்காக தானே வியாபாரத்தை நடத்தும் ஒரு நபர் தனி வணிகர் ஆவார். அவர், வியாபாரத்தில் இடும் முதலுக்கு உரிமையாளர் மட்டுமின்றி அமைப்பாளராகவும், மேலாளராகவும் செயல்பட்டு வியாபாரத்தில் கிடைக்கும் இலாபத்தை எடுத்துக்கொண்டு நட்டத்திற்கும் பொறுப்பாகிறார்””.
7. **தனியாள் வணிகத்திற்கு ஏற்ற தொழில்கள்:**
   I. **குறைந்த மூலதனம் தேவைப்படும் தொழில்கள். 1.** இனிப்புக் கடை 2. அடுமனைகள் 3. பெட்டிக்கடை
   II. **விரைந்து முடிவெடுத்தல் முக்கியம்:** 1. பங்குதாரர்கள் 2. மருத்துவர்கள்
   III. **குறைந்த இடர்பாடுள்ள தொழில்கள்:** 1. ஊர்தி பழுதுபார்க்கும் தொழில் 2. சில்லறை விற்பனை நிலையங்கள்
   IV. **வாடிக்கையாளர் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப தனிகவனம் செலுத்த வேண்டிய தொழில்கள். 1.**அழகு நிலையங்கள் 2. தையலகம்
   V. **உள்ளூர் தேவை பருவகால தேவை மற்றும் தற்கால தேவையுடைய தொழில்கள்:** 1. சிறு வியாபாரம் **2.** சலவை நிலையம் 3. பழ வியாபாரிகள்

**8.தனியாள் வணிகர் குணாதிசயம்**

I. **தனிநபர் உரிமையும் கட்டுப்பாடும்:** 1.ஒருவரே உரிமையாளர் அவரே தொழிலை மேற்கொள்கிறார்.
   2. யாருடைய குறுக்கீடின்றி சுதந்திரமாக தொழிலை கட்டுப்படுத்துகிறார்.

II. **மூலதனம்:** 1.ஒருவரே முதலிடுகிறார் தேவைப்படின் உறவினர், நண்பர்களிடம், நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்று முதலீடு செய்கிறார்.
   2.பெரும்பாலும் முதல் சிற்றளவாகவே இருக்கும்.

III.**வரையறாப்பொறுப்பு**: 1. தொழில் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிட்டால், தனது சொந்த சொத்துக்களிலிருந்து அக்கடன்களை தீர்க்க வேண்டும்.
   2. அதாவது கடனீந்தோர் உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு.

IV.**இலாப நட்டம்**: 1. முழு இலாபமும் தனி நபருக்கே பிறருடன் பங்கிட்டுக்கொள்ளத் தேவையில்லை.
   2. நட்டமும் அவ்வாறே

V. **பதிவு:** 1. பதிவு செய்ய இயலாது. 2. எவரும் எந்த சட்ட சடங்குமின்றி தொடங்கலாம்.

VI. **தனிச்சட்டம் இல்லை:** கூட்டாண்மை, கூட்டு பங்கு நிறுமம், கூட்டுறவு சங்கம் போன்ற அமைப்புகளை ஒழுங்குபடுத்த சட்டம் இருப்பது போல தனி வணிகத்திற்கு சட்டம் ஏதுமில்லை

VII. **சட்டத் தனித்துவமின்மை:** 1. உரிமையாளரும் வணிகமும் ஒன்றாகவே கருதப்படுகின்றது.
   2. கூட்டு பங்கு நிறுமத்தைப் போல உரிமையும் நிர்வாகமும் பிரிக்கப்படவில்லை.

VIII. **வாழ்வு**: 1.உரிமையாளர் வாழ்வை பாதிக்கும் எதுவும் தொழிலை பாதிக்கும்.
   2. அவருடைய இறப்பு, திறன் இழப்பு, வாரிசு இன்மை தொழிலை முடிவுக்கு கொண்டு வரும்.

IX. **எளிமை:** 1. தொடங்குதல், நடத்துதல், கலைத்தல் எளிது.
   2. தொடங்க, கலைக்க சட்ட விதிகள் ஏதுமில்லை.

X.. **உள்ளூர் வியாபாரம்**: குறிப்பிட்ட தெரு வட்டாரம் அல்லது கிராம அளவில் நடைபெறும்.

XI.. **சுய வேலை வாய்ப்பு:** 1. தானே தொழில் நடத்துவது, குடும்ப உறுப்பினர்களை தொழிலில் ஈடுபடுத்துவது சுய வேலைவாய்ப்பை உருவாக்குகிறது.

2. சில வெளியாட்களை வேலைக்கு அமர்த்தி வேலை வாய்ப்பை உருவாக்குகிறார்.

XII. **குறைந்த முதல்:** 1.மிகவும் குறைந்த முதலே போதுமானது.

2. பிற அமைப்புகளுக்கு (கூட்டாண்மை, கூட்டு பங்கு நிறுமம்) அதிக முதல் தேவை.

**9. தனியாள் வணிகத்தின் நன்மைகள்:**

I. **எளிதான அமைப்பு:** 1. சட்டசிக்கல் ஏதுமின்றி தொடங்கலாம்.
2.ஒப்பந்தம் பதிவு எதுவும் தேவையில்லை.
3.ஆர்வம் உள்ள எவரும் தொழில் தொடங்கலாம்.

II. **நேரடி ஊக்குவிப்பு:** 1. இலாபம் முழுவதும் உரிமையாளரையே சேரும்.
2. வேறு எவரும் பங்கு கோர முடியாது.
3. தொழிலை விரிவாக்கம் செய்ய ஊக்குவிப்பாக இது அமைகிறது.

III. **நெகிழ்வு தன்மை:** 1. பொதுவாக தனியாள் வணிக அமைப்புகள் சிறியளவில் செயல்பட்டு வருகின்றன.
2. தான் நடத்தி வரும் வணிகத்தை மாற்ற வேண்டும் என்றால் அதிக செலவினங்கள் இல்லாமல் மாற்றிக்கொள்ளலாம்.
3.தனிவணிகர் ஒருவரே உரிமையாளர் என்பதால் சந்தை நிலவரத்திற்கேற்பவும், வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்பவும் தன் வியாபார தன்மைகளை மாற்றிக்கொள்ளலாம்.

IV. **வியாபார இரகசியங்களை காப்பது**: 1. போட்டிகள் நிறைந்த வியாபார உலகில் தொழில் இரகசியம் காத்தல் அவசியம். 2. தனி வணிகத்தில் மட்டுமே இது சாத்தியம்.
3.ஒருவர் மட்டுமே என்பதால் ரகசியம் காக்கப்படுகிறது.

V. **விரைவான முடிவு**: 1. வேறு உரிமையாளர் இல்லை எனவே எவரையும் கலந்து ஆலோசிக்க வேண்டிய கட்டாயமில்லை. 2. காலதாமதமின்றி விரைந்து முடிவெடுக்கலாம்.

VI. **அதிக வெகுமதி:** 1. சரியாக செய்யாத தொழில் நட்டத்தை ஏற்படுத்தும் என்ற நட்டவச்சம் காரணமாக கடின உழைப்பு, கவனமான அணுகுமுறை, பொருளாதார சிக்கனம் போன்றவற்றிக்கு தூண்டுகோலாய் அமையும்.

VII. **திறன்மிகு கட்டுப்பாடு** 1. ஒருவர் மட்டுமே இருப்பதால் தொழில் நடவடிக்கைகளை நன்றாக திட்டமிட்டு செயல்படுத்த முடியும்.
2. வியாபார நடவடிக்கைகள் மீது அவர் மேற்கொள்ளும் கட்டுப்பாட்டின் திறனை அதிகரிக்க உதவும்.

VIII.**அதிகளவு விற்பனை**: 1. வாடிக்கையாளர்களிடம் நேரடி தொடர்பு வைத்திருந்து அவர்களின் விருப்பு, வெறுப்புகளை அறிந்து பொருளின் தரம் வடிவம் முதலியவற்றை வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப வழங்க முடிகிறது.

IX. **வியாபாரத்தை எளிதாக நடத்துதல்:** 1. சிறிய அமைப்பாக உள்ளதால் அறிமுகமானவர்களே வேலைக்கு அமர்த்தப்படுவதால் பணியாளர் முதலாளியிடையே உறவு மேம்பட உதவுகிறது.
2. வேலை நிறுத்தம், வேலைக்கு வராமை ஆகிய இடர்பாடுகள் நிகழ்வதில்லை.

X. **சிக்கன மேலாண்மை:** 1. தானே உரிமையாளராகவும் கட்டுப்பாட்டாளராக செயல்படுவதால் தனியாக மேலாளருக்கு ஊதியம் தர தேவையில்லை.
2. தொழில் நுட்பம் அறிந்த நபர்களை வேலைக்கு அமர்த்துவதில்லை.
3. தானே முன்னின்று செய்வதால் நிர்வாக செலவு குறைகிறது.

XI. **அதிக நிதிதர மதிப்பீடு:** 1. வரையறாப் பொறுப்பு என்பதால் அவரது சொந்த சொத்துக்களை கணக்கில் எடுத்துக் கொண்டு பலர் கடன் தர முன் வருவர். 2. வங்கி, நிதி நிறுவனங்களும் கடன் வழங்க முன்வரும்.

XII. **சுய வேலை வாய்ப்பு:** 1. குறைந்த மூலதனமுடைய எவரும் தொழில் தொடங்கலாம்.
2. சுதந்திரமாக வாழ விரும்புபவர்கள், அடிமைத்தொழில் செய்ய விரும்பாதவர்களுக்கும் தனி வணிகம் வாய்பளிக்கிறது.

XIII. **ஆளுமை வளர்ச்சி:** 1.தன்னம்பிக்கை, தொழில் தொடங்க முயற்சி, பொறுப்புணர்ச்சி, தந்திரத்துடன் முடிவெடுத்தல் போன்ற பண்புகள் வளர்கிறது.

XIV. **பொருளாதார வளங்களை சமமாக பகிர்ந்தளித்தல்:** 1. அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்கி சுயவளர்ச்சிக்கு தனி வணிகம் உதவுகிறது.
2. தொழில்பரவலாக்கத்தை ஊக்கப்படுத்துவதுடன். ஒருவரிடமேஅனைத்துசெல்வமும் குவிதலை தடுக்கிறது.

XV. **எளிமையான கலைப்பு:** 1. கலைப்பது மிக எளிது.
2. விரும்பும் போது எவ்வித சட்ட சிக்கலின்றி கலைக்கலாம்.

XVI. **சிறந்தஒருங்கிணைப்பு:** 1. சிறிய அளவில் குறைந்த முதலுடன் செயல்படுவதால் தனது வணிக நடவடிக்கைகளை சிறந்த முறையில் ஒருங்கிணைக்க முடியும்.

**10. தனியாள் வணிகத்தின் தீமைகள்:**

I.**அளவான முதல்:** 1. மூலதன ஆதாரம் வரையறுக்கப்பட்டது. 2. வியாபார பெருக்கம் முடிவதில்லை.
3. கடன் பெற்று முதலீடு செய்தாலும் அதற்கான வட்டி ஆதாயத்தை குறைக்கும்.
4. வரையறா பொறுப்பு இடர் வேறு உள்ளது.

II.**வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறன்:** 1. தனிநபரின் மேலாண்மைத் திறனுக்கு எல்லை உண்டு.
2. கொள்முதல், கணக்கியல், நிதி, விளம்பரம் என அனைத்து துறையிலும் ஒருவர் வல்லமை பெற்றிருப்பது சிரமம்.
3. வல்லுநர்களை பணியமர்த்தவும் நிதிநிலை இடம் தராது.

III. **வரையறாப் பொறுப்பு:** 1. தொழில் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிட்டால், தனது சொந்த சொத்துக்களிலிருந்து அக்கடன்களை தீர்க்க வேண்டும்.
2. அதாவது கடனீந்தோர் உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு.

IV. **குறுகிய வாழ்வு:** 1. தனிவணிகரின் வாழ்வை பாதிக்கும் எதுவும் தொழிலை பாதிக்கும்.
2.இறப்பு, நிரந்தர செயல்இன்மை, ஆர்வமான வரிசுயின்மை போன்றவை தொழிலை முடிவுக்கு கொண்டுவந்துவிடும்

V. **அவசரமுடிவு**: 1. தீர விசாரித்து எடுக்கப்படும் முடிவுகள் சிறப்பானதாக இருக்கும். ஆனால் இவ்வமைப்பில் கலந்து ஆலோசிக்க ஆள் இல்லாததால் ஒருவரே முடிவெடுப்பதால் அவசரமான தவறான முடிவாக அமைய வாய்ப்புள்ளது.

VI. **சிறப்புத் தேர்ச்சியின்மை**: 1.கொள்முதல், விற்பனை கணக்கியல், நிதி, விளம்பரம் போன்றவை தனித்திறம் வேண்டுபவை. இவ்வமைப்பில் ஒருவரே இவையனைத்தும் கவனிக்க இயலாது.

VII. **குறைந்தளவு வியாபாரம்**: 1. முதல் மற்றும் திறமை குறைவாக இருப்பதால் தனி வணிகர் தனது வணிக அமைப்பை சிறிதாக அமைத்து கொள்கிறார். 2. இதனால் பேரளவு உற்பத்தியின் பயன்களை பெற இயலாது.

VIII.**கலந்து ஆலோசனையின்மை:** 1. சில முக்கிய முடிவுகளை எடுக்கும் போது குடும்ப உறுப்பினர்களை தவிர பிறரை கலந்து ஆலோசிக்காமல் முடிவு எடுக்கிறார்.
2. முடிவு தவறாகி விட்டால் பெரும் நட்டத்தை சந்திக்க நேரிடும்

IX. **நிலையற்ற தன்மை:** 1. வாழ்வு நிலையற்றது, உறுதியற்றது.
2. நுகர்வோரின் விருப்பு வெறுப்பு மற்றும் தொழில் நுட்ப மாற்றம் ஆகியவற்றை பொறுத்தே வியாபாரம் அமையும்.
3. நவீன வளர்ச்சிக்கு ஏற்ப தன் அணுகுமுறையை மாற்றாவிடில் தொழில் செய்வது சிரமம்.

X. **முழு நட்ட அபாயம்:** 1. ஒரு நபராக இருப்பதால் தொழில் ஏற்படும் மொத்த நட்டமும் அவரே ஏற்க வேண்டும்.

11. **சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கு:**
1. நுகர்வோர் மன்னர்களாக மதிக்கப்படுகிறார்கள்.
2. வியாபாரிகள் நுகர்வோரின் தேவைகள் விருப்பங்கள் எதிர்பார்புகள் ஆகியவற்றை பூர்த்தி செய்கின்றனர்.
3. அன்றாடம் தேவைப்படும் உணவு வகைகள், துணிவகைகள், எழுதுபொருட்கள், மருந்து பொருட்கள், முதலியன தனி வணிகர் மூலம் நுகர்வோருக்கு அவர்கள் வாழும் இடத்திற்கு அருகாமையிலேயே கிடைக்கிறது.

சமுதாயத்தின் தேவைகளை பூர்த்திசெய்வதோடு கீழ்காணும் வகையில் பணியாற்றுகிறது.

I. **வேலையில்லா பிரச்சனைக்கு தீர்வு:** குறைந்த கல்வியறிவு உடையவர்களுக்கும், கல்வியறிவு அற்றவர்களுக்கும் அவரவர் இடங்களிலேயே வேலையளித்து ஓரளவு வேலையில்லா பிரச்சனையை தீர்க்கிறது.

II. **முதலீட்டுக்கான வாய்ப்பு** சிறு முதலீட்டாளர்கள் குறைந்த முதலுடன் தொழில் தொடங்க வாய்பளிக்கிறது. முதலீட்டாளர்களின் சேமிப்புகளை உற்பத்திக்கு பயன்படுத்த உதவுகிறது.

III. **குறைந்த விலையில் பொருட்களை அளித்தல்:** நிர்வாக செலவு குறைவு என்பதால் பொருட்களின் மீதான அதிகபட்ச விலையைவிட குறைவாகவே விற்பனை செய்வர்.

IV. **சிறு உற்பத்தியாளர்களுக்கு உதவுதல்:** உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் உள்ளூர் சிறு உற்பத்தியாளர்கள் பயன் பெறுகின்றனர்.

V. **தரமான பெருட்களை அளித்தல்:** 1. தன் வியாபார நன்மதிப்பை காக்க உயர்ந்த தரமான பொருட்களையே விற்பனை செய்கிறார்.
2. விற்ற பொருட்களில் குறையிருப்பின் அதை திரும்ப பெற்று வேறு நல்ல பொருளை திரும்ப தருகிறார். 3. நுகர்வோர் நலனில் அக்கறை கொள்கிறார்.

VI. **தர்ம சிந்தனையுள்ள நடவடிக்கைகள்:** தனி வணிகர்கள் தனியாகவோ குழுக்களாகவோ அமைத்து இலவச கண் சிக்சை முகாம், மருத்துவ முகாம், பூங்காக்களை பராமரித்தல், ஏழை மாணவர்களுக்கு இலவச சீருடை நோட்டு புத்தகங்கள், பள்ளிகளுக்கு அறைகலன்கள் வழங்குதல் போன்ற பல சமுதாய பணிகளை மேற்கொள்கிறார்கள்.

VII. **வருமானம் மற்றும் வளங்களை சமமாக பகிர்ந்து அளித்தல்:** பலர் வியாபார உலகில் தனிவணிகராக ஈடுபட வாய்பளித்தால் வருமானம் மற்றும் வளங்களை சமமாக பகிர்ந்தளிக்க உதவுகிறது.

VIII. **நுகர்வோருக்கு உதவுதல்:** நுகர்வோர் வீட்டு வாசலிலேயே பொருட்களை கிடைக்க செய்வதால், நுகர்வோரின் நேரமும், உழைப்பும் மிச்சமாகிறது.

12. **உலகிலேயே தனிநபர் கட்டுப்பாடு சிறந்தது: வில்லியம் பேசட்-** உலகிலேயே தனிநபர் கட்டுப்பாடு தான் சிறந்தது என்றும் சிறிய தொழிலாக இருந்தால் மட்டுமே ஒருவர் அவ்வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் மேற்பார்வை செய்ய இயலும்.
தனிநபர் கட்டுப்பாட்டுக்கு சாதகமானவை

I.**எளிமையானது மற்றும் விரைவாக அமைத்தல்**: 1. சட்டசிக்கல் ஏதுமின்றி விரும்பியவுடன் தொழில் தொடங்கலாம். 2. பதிவு, ஒப்பந்தம் தேவையில்லை. 3. மிக இயல்பான எளிதான அமைப்பு

II.**நேரடி கட்டுப்பாடு:** 1. உரிமையாளரே தொழிலை மேற்கொள்வதால் பணியாளரின் செயல்திறன் அதிகரிக்கும். 2. செயல்பாட்டில் சிக்கனம் காணப்படும்.
3.தொழிலாளர் பிரச்சனைகள் சுமுகமாக தீர்க்கப்பட்டு தொழில் சிறப்பாக நடைபெறும்.

III.**முயற்சி மற்றும் பயன் இணைதல்:**1.உழைப்பை அதிகரித்தால் கிடைக்கும்பலன் தனிவணிகரையே சாரும்.
2. இது தொழில் விரிவாக்கத்திற்கு ஊக்குவிப்பாக அமைகிறது.

IV. **வியாபார இரகசியங்களை காத்தல்:** போட்டிகள் நிறைந்த வியாபார உலகில் தொழில் இரகசியம் காத்தல் மிகமிக அவசியம். தனிவணிகத்தில் ஒரே ஒரு நபர் மட்டும் உள்ளதால் மேலும் அவருக்கு நன்மை ஏற்படும் என்பதால் தொழில் இரகசியம் காக்கப்படுகிறது.

V. **நுகர்வோரிடம் நெருங்கிய தொடர்பு:** 1. நேரடியாக தொழில் மேற்கொள்வதால் நுகர்வோருடன் நெருங்கிய உறவு காண முடிகிறது.

2. நுகர்வோரின் விருப்பு வெறுப்பு அறிந்து சேவை செய்கின்றனர். ஆதலால் நுகர்வோர் மனநிறைவுடன் தொடர்ந்து ஆதரவு அளிக்கின்றனர்.

VI. **இலாபம் முழுவதும் அனுபவித்தல்:** 1. பிற வியாபார அமைப்பை போல் அல்லாமல் தனிவணிகத்தில் கிடைக்கும் இலாபம் முழுவதும் அவரையே சாரும். ஆதலால் கடினமாகவும், கவனமாகவும் உழைப்பர்.
2. தொழில் வளர்ச்சியில் அக்கறை காட்டுவர்.

VII. **சிக்கன மேலாண்மை**: 1. நேரடியாக தாமே தொழிலை மேற்கொள்கிறார்.
2. குடும்ப உறுப்பினர்களை பணியில் அமர்த்துகிறார்.
3. இதனால் பெருட்கள் சேதம், வீண் விரயம் இல்லை.
4. குறைந்த நிர்வாக செலவில் மிகுந்த பலன் கிடைக்கிறது.

VIII. **சட்ட சிக்கலின்மை:** 1.தனிச்சட்டம் ஏதுமில்லை. **2.** பதிவு தேவையில்லை. **3.**அரசு கட்டுப்பாடு ஏதுமில்லை.
4. எனவே நிர்வாகம் குறுக்கீடு ஏதுமின்றி சிறப்பாக நடைபெறுகிறது.

IX. **பணியாளரிடம் நேரடித் தொடர்பு**: 1. சிறு தொழில், குறைந்த எண்ணிக்கையில் பணியாளர்கள், நேரடி கட்டுப்பாடு, எனவே பணியாளர்களிடம் நேரடித் தொடர்பு இருக்கும்.
2. குறைகள் உடனடியாக தீர்க்கப்படும். 3. வேலை நிறுத்த பிரச்சனை ஏற்பட வாய்ப்பு இல்லை.

X. **சமுதாய விருப்பம்**: தனியாள் வணிகர் லாபம் பெறுவதோடு சமுதாய மேம்பாட்டிற்க்காக மருத்துவ முகாம் நடத்துவது, சாலையோர பூங்காக்களை ஏற்படுத்தி பராமரிப்பது, ஏழை மாணவர்களுக்கு இலவச சீருடை, நோட்டு புத்தகங்கள் வழங்குவது போன்ற நலப் பணிகளை செய்கின்றனர்.

**தனிநபர் கட்டுப்பாட்டின் குறைகள்**

I. **அளவான முதல்** 1. மூலதன ஆதாரம் வரையறுக்கப்பட்டது. 2. வியாபார பெருக்கம் முடிவதில்லை.
3.கடன்பெற்று முதலீடுசெய்தாலும் அதற்கானவட்டி ஆதாயத்தைகுறைக்கும்.4.வரையறாபொறுப்புஇடர்வேறு உள்ளது.

II. **அளவான மேலாண்மைத் திறன்:** 1. தனிநபரின் மேலாண்மைத் திறனுக்கு எல்லை உண்டு.
2. கொள்முதல், கணக்கியல், நிதி, விளம்பரம் என அனைத்து துறையிலும் ஒருவர் வல்லமை பெற்றிருப்பது சிரமம். 3. வல்லுநர்களை பணியமர்த்தவும் நிதிநிலை இடம் தராது.

III. **வரையறாப் பொறுப்பு:** 1. தொழில் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிட்டால், தனது சொந்த சொத்துக்களிலிருந்து அக்கடன்களை தீர்க்க வேண்டும்.
2. அதாவது கடனீந்தோர் உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு.

IV. **பேரளவு தொழில் செய்ய இயலாமை:** 1. முதல் மற்றும் திறமை குறைவாக இருப்பதால் தனி வணிகர் தனது வணிகஅமைப்பை சிறிதாக அமைத்துகொள்கிறார்.2.இதனால் பேரளவுஉற்பத்தியின் பயன்களைபெற இயலாது.

V. **இடர்பாடுள்ள முடிவுகள்**: 1. சில முக்கிய முடிவுகளை எடுக்கும் போது குடும்ப உறுப்பினர்களை தவிர பிறரைகலந்துஆலோசிக்காமல் முடிவுஎடுக்கிறார். 2.முடிவுதவறாகிவிட்டால் பெரும்நட்டத்தை சந்திக்க நேரிடும்

VI. **நிலையற்ற தன்மை**: 1. வாழ்வு நிலையற்றது, உறுதியற்றது. நுகர்வோரின் விருப்பு வெறுப்பு மற்றும் தொழில் நுட்ப மாற்றம் ஆகியவற்றை பொறுத்தே வியாபாரம் அமையும்.
2. நவீன வளர்ச்சிக்கு ஏற்ப தன் அணுகுமுறையை மாற்றாவிடில் தொழில் செய்வது சிரமம்.